## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No.280/2019

### 25.02.2026

### P.W.2- மலைச்சாமி

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.95/4 ஆகும். தாவா சொத்தின் நான்கு மால் பற்றி தெரியாது. பின்னத்தேவரை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிருபண வாக்கமூலம் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். அதில் நான் கையெழுத்து செய்தேன். அதில் சொல்லப்பட்டுள்ள விவரம் தெரியும். பின்னியம்மாள் எனது மனைவி என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மாமியார் சின்னவீரம்மாள் மற்றும் எனது மனைவி பின்னியம்மாள் இவ்வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். தேட்டாளன் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பின்னத்தேவரின் மகன் சங்குமாயனின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எனது மனைவி, மாமியார், செல்வம், சங்கு, தேட்டாளன் ஆகியோர்கள் பெயரில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கும், பின்னத்தேவருக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. முத்துபின்னத்தேவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவியின் பெயர் வீரக்காள் என்றால் சரிதான். முதல் மனைவியின் மூலம் சுப்பிரமணி, சக்கரையம்மாள், பழனியாண்டித்தேவர், கருமயில், தேட்டாளன் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். இரண்டாவது மனைவி வீரம்மாள் மூலம் கருத்தேட்டு, பசுபதி, காசம்மாள், சுப்பையா, சங்குமாயன் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். கொடிவழி ஜாபிதாவில் சக்கரையம்மாள், கருமயில், பசுபதி,

காசம்மாள், கருத்தேட்டு வாரிசுகள், தேட்டாளன் மகன் மணிமாறன், விஜயன், அவரது மகளான சிவணம்மாள், சக்கரையம்மாள் வாரிசுகளான நாகராஜ், பரமசிவம், பொன்னுத்தாய், ராமதேவி, செல்வி, குந்தம்மாள், சங்குமாயன் வாரிசுகளான விஜயஷர்மா, விஜய்சரன், விஜயசர்மிளா ஆகியோர்கள் பெயரை சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது மாமனார் வேங்கைபுலி (எ) பழனியாண்டி, எனது மனைவி பின்னியம்மாள் ஆகியோர்கள் பெயரை கொடிவழி ஜாபிதாவில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சக்கரையம்மாள், 1, 2 வாதிகளின் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். 3வது வாதிக்கு அத்தை முறை ஆவார் என்றால் சரிதான். மேற்படி உறவுமுறைகளை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. சக்கரையம்மாளின் கணவர் பெயர் அன்னக்கொடி என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அன்னக்கொடித்தேவர் மனைவி சக்கரையம்மாள், மகன்கள் நாகராஜ், பரமசிவம் ஆகியோர்கள் பெயரில் உள்ள தாவா சொத்தான சர்வே எண்.95-4ஏ3ஏ1-விற்கான பட்டா என்றால் சரிதான். 3வது வாதி, அவரது மகளுக்கு கடந்த 2020ம் ஆண்டு தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்ட செல்வம், சக்கரையம்மாளை அம்மா என குறிப்பிட்டுள்ளது தவறு தான். சக்கரையம்மாளுக்கு சொந்த ஊர் கொங்கப்பட்டி என்றால் சரிதான். சக்கரையம்மாள் சீமானூத்து கிராமத்தில் இறந்ததாக செல்வம் போலியாக இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து அன்னக்கொடித்தேவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டு அவர் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி அன்னக்கொடித்தேவரின் மனைவி சக்கரையம்மாள் மற்றும் அவரது வாரிசுகளான நாகராஜ், பரமசிவம், நாகராஜ் மனைவி பாக்கியம் ஆகியோர்கள் பவர் ஏஜென்ட் மூலம் கடந்த 2014ம் ஆண்டு பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நாகராஜ் மனைவி பாக்கியம், செல்வத்தின் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். வழக்கு சொத்து பற்றி எதுவும் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1253 சதுர அடியை பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மீதியுள்ள 1253 சதுர அடியை சுமதி என்பவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி சுமதி மீது இதே வாதிகள்

அ.வ.279/2019 என வழக்கு தாக்கல் செய்து வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.02.25 17:43:27 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.